**IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, KARUR.**

**MCOP.NO. 265/ 2024**

Deposition of PW - 1 solemnly affirmed by S.Vidya Priya, Bench Clerk Grade-II of this court on 09.10.2025 in accordant with provisions of XLIV of 1989.

| | | | |
|---|---|---|---|
| Name | : **நாட்ராயன்** | Age | : |
| Father's Name | : **கந்தசாமி** | Village | : |
| Calling | : | Taluk | : |

**முதல் விசாரணை**

நான் இம் மனுவின் மனுதாரர் ஆவேன். எனது சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். எனது தரப்பு சான்றாவணங்களை தாக்கல் செய்கிறேன்.

| **வ.எண்.** | **தேதி** | **ஆவணம்** | **ஆவணத்தின் தன்மை** |
|---|---|---|---|
| ம.சா.ஆ.1 | | முதல் தகவல் அறிக்கை | பதிவிறக்க நகல் |
| ம.சா.ஆ.2 | | காப்பீட்டுச் சான்றிதழ் | பதிவிறக்க நகல் |
| ம.சா.ஆ.3 | | காயச்சான்றிதழ் | பதிவிறக்க நகல் |
| ம.சா.ஆ.4 | | அமராவதி மருத்துவமனையின் சிகிச்சை விவரக்குறிப்பு | அசல் |
| ம.சா.ஆ.5 | | கோவை KMCH மருத்துவமனையின் சிகிச்சை விவரக்குறிப்பு | அசல் |
| ம.சா.ஆ.6 | | கோவை KMCH . மருத்துவமனையின் சிகிச்சை விவரக்குறிப்பு | அசல் |
| ம.சா.ஆ.7 | | கோவை KMCH மருத்துவமனையின் சிகிச்சை விவரக்குறிப்பு | அசல் |
| ம.சா.ஆ-8 | | மருத்துவ ரசீதுகள் (ரூ.2,99,827/-) | அசல் |

## 2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

எனக்கு ஏற்பட்ட எலும்பு முறிவு இன்னும் குணமாகவில்லை. மேலும் அறுவை சிகிச்சை செய்யவேண்டியுள்ளது. மேலும் அறுவை சிகிச்சை செய்வதற்கான மருத்துவ அறிக்கையை மருத்துவமனையில் கொடுத்தார்கள். அதை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்து சமயத்தில் நான் இரு சக்கர வாகனத்தில் பயணம் செய்தேன். என் மீது மோதியது கார் ஆகும். கரூர் - கோயம்புத்தூர் நெடுஞ்சாலையில் விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். நான் சாலையை கடக்க முயன்றபோது விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் சாலையின் ஓரத்தில்தான் நின்றுகொண்டிருந்தேன். நான் நின்று கொண்டிருந்த சாலை ஓரத்திற்கு எதிரில் பிரிவு சாலை உள்ளது என்றால் சரிதான். அந்த சாலைக்கு செல்வதற்காகத்தான் நான் நின்றுகொண்டிருந்தேன் என்றால் சரியல்ல.

எனது பிரமாண வாக்குமூலத்தில் சாலையை கடப்பதற்காக நின்றுகொண்டிருந்தேன் என்று சொல்லியிருந்தால் அது தவறு என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணை வாக்குமூலத்திற்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எவ்வளவு தொலைவில் நான் காரை பார்த்தேன் என்று நினைவில்லை. கார் வருவதை சற்று தொலைவிலேயே கவனித்தேன். நான் தார் சாலையை கடக்க முயற்சித்தபோது கார் வருவதை கவனிக்காமல் நானாகவே விபத்தை ஏற்படுத்திக் கொண்டேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள மருத்துவ பில்கள் வழக்கிற்காக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் விவசாய வேலை செய்து வந்தேன். எனக்கு சொந்தமாக விவசாய நிலம் உள்ளது.

எனக்கு எலும்பு முறிவு நல்ல முறையில் குணமாகிவிட்டது என்று மருத்துவமனையில் சொல்லியுள்ளார்கள் என்றால் சரியல்ல. வருங்கால மருத்துவ செலவு ரூ.3 லட்சம் ஆகும் என்று நான் கற்பனையாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அதற்கான ஆவணம் என்னிடம் இல்லை

என்றால் சரியல்ல. எனக்கு காலில் பொருத்தப்பட்ட உலோகம் அரசு மருத்துவமனையில் இலவசமாக நீக்கிக் கொள்ளலாம் என்றால் சரியல்ல. என்னுடைய ஓட்டுநர் உரிமம் விபத்து சமயத்தில் சேதம் அடைந்துவிட்டது. எனக்கு முறையான ஓட்டுநர் உரிமம் இல்லை என்றாலும் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் ஓட்டுநர்உரிமம் இல்லாமல் சாலை விதிகளை பின்பற்றாமல் நானாகவே விபத்தை ஏற்படுத்திக் கொண்டதால் 2-ம் எதிர்மனுதாரர் நிறுவனம் நஷ்ட ஈடு கொடுக்க கடமைப்பட்டவர் இல்லை என்றால் சரியல்ல. நான் கேட்டுள்ள இழப்பீடு மிகவும் அதிகம் என்றால் சரியல்ல.

| | |
|---|---|
| | சாட்சி கூறிய சாட்சியத்தை எதிரியின் முன்னிலையில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சுசெய்யப்பட்டு, பின்னர் சாட்சியிடம் படித்துக் காட்டி சரியாக உள்ளது என்று ஒப்புக் கொண்டு சாட்சியால் கையெழுத்திடப்பட்டது.<br>(ஓம்.என்.எஸ்.ஜெயபிரகாஷ்)<br>தலைமை குற்றவியல் நடுவர்,<br>கரூர். |